**அலையலின் பெயர்**

அலைசன் ஞெகிழ்தன் ஞொள்க லாஞ்சி
அலையலின் பெயரென வறைதற் குரிய.

**சத்தி செயலின் பெயர்**

உமிழ்தல் கான்ற லுற்காரஞ் சத்தி.
உமிழ்தல் கான்ற லுற்காரஞ் சத்தி
செயலின் பெயரெனச் செப்பினர் புலவர்-பிற்பதிப்புக்கள்.

**மூச்சின் பெயர்**

தும்மல் சுவாச மூச்செனச் சொல்லும்.

**தாழ்தலின் பெயர்**

குரங்க லிறைஞ்சல் கூறுப தாழ்தல்.

**இறக்குதலின் பெயர்**

இறக்குத லிறங்குதல் குனிவு மாகும்

இதன் பின்னர் 1770 ஆம் நூற்பாவை முதற்பதிப்பும் அதன் வழிவந்த பிற்பதிப்புக்களும் அமைத்துள்ளன.

### 1771. சேந்தன் பெரும்புகழ்

அண்ணல் சம்புஆதிக் காணி யாட்டியை,
பெண்ணணங்கை, மூவுலகும் பெற்ற அம்மையை,
செந்தமிழ் மாலை அந்தாதி புனைந்த
நாவலன், அம்பர்க் காவலன், சேந்தன்
உயர்வுற்ற திவாகரத்து ஒன்பதாவது
**செயல்பற்றிய பெயர்த்தொகுதி** முற்றும்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 : 1—2 அண்ணல் செம்பாதிக்
4 : 2—3 அம்பற் காவலன்
5 : 1—2 செய்கையுற்ற, இயல்வுற்ற (214)

பத்தாவது

## ஒலி பற்றிய பெயர்த்தொகுதி

பத்தாவது

# ஒலி பற்றிய பெயர்த் தொகுதி

1772. எழுத்தினோசைச் சொல்லின் பெயர்

நொடியும், கதையும், பனுவலும், கிளவியும்,
பறையும், இசையும், கூற்றும், மாற்றமும்,
அறையும், மொழியும், வாணியும், புகறலும்
உரையும், எழுத்தின் ஆகிய ஓசைச் சொல்.

**எழுத்தினோசைச் சொல்லின் பெயர் : (13)**

1. நொடி, 2. கதை, 3. பனுவல், 4. கிளவி, 5. பறை, 6. இசை, 7. கூற்று, 8. மாற்றம், 9. அறை, 10. மொழி, 11. வாணி, 12. புகறல், 13. உரை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 : 3—4 கிளவியும் பனுவலும்

3 : 4 வினாவும்

இந்நூற்பா அச்சுப்பிரதியில் இல்லை. அச்சுப்பிரதியில் காணப்படும் 'விரித்தல் கதைத்தல்' எனத் தொடங்கும் நூற்பா ஏடுகளில் காணப்படவில்லை. அது வருமாறு :

**சொல்லுதலின் பெயர்**

விரித்தல் கதைத்த லுரைத்தல் கூற
றெரித்த லாட லொடித்த லவிலல்
சாற்றல் பணித்தன் மொழிதல் வலித்திட
லேற்றமுந் நான்குஞ் சொல்லுதற் கிசையும். (1)

1773. சொல்லின் பொதுப்பெயர்

பகர்தல், செப்பல், இயம்பல், பரவல்,

குயிறல், இறுத்தல், கூறல், புகறல்,
கட்டுரை, விளம்பல், கரைதல், ஓதல்,
சொற்றல், வழங்கல், வசனம், காதை,
பேசல், பேச்சு, கிளப்பே, அறைதல்,
இசைப்பு, தேர்தல், மிழற்றல், வாணி,
அசைப்பு என்று இன்னவை **சொல்** என அறைவர்.

**சொல்லின் பொதுபெயர் : (25)**

1. பகர்தல், 2. செப்பல், 3. இயம்பல், 4. பரவல், 5. குயிறல், 6. இறுத்தல், 7. கூறல், 8. புகறல், 9. கட்டுரை, 10. விளம்பல், 11. கரைதல், 12. ஓதல், 13. சொற்றல், 14. வழங்கல், 15. வசனம், 16. காதை, 17. பேசல், 18. பேச்சு, 19. கிளப்பு, 20. அறைதல், 21. இசைப்பு, 22. தேர்தல், 23. மிழற்றல், 24. வாணி, 25. அசைப்பு.

**பாடவேறுபாடு – விளக்கம்**

தலைப்பு : சொல்லின் பெயர், சொல்லுதலின் பெயர்.

6 : 1—2 இசைப்புக் கோதல்

7 : 1—2 அசைப்புக் கீரோடு

இதன் பின்னர் முதற் பதிப்பாசிரியர் சேர்த்த நான்கு நூற்பாக்கள் வருமாறு :

**மற்றுச் சொல்லின் பெயர்**

258. ★ குயில்வினா வெதிர்ப்புக் கீர் நுவல் பாணி
யியம்வாக் கென்பவுஞ் சொல்லின் பால.

பிற்பதிப்புக்கள் இதனை முந்திய நூற்பாவோடு இணைத்து அதன் அங்கமாக அமைத்துள்ளன.

**பதத்தின் பெயர்**

259. ★ பாழியு முரையும் பதமென வுரைப்பர்.

**வாசகத்தின் பெயர்**

260. ★ வார்த்தை வசனம் வசித்தல் பாசுரஞ்
சேர்த்த நான்கும் வாசகஞ் செப்பும்.



**பல்கால் விளம்புதலின் பெயர்**

261. ★ மீதுரை பல்கால் விளம்புத லாகும்.

இதனை அடுத்து முதற் பதிப்பில் 'சத்தியத்தின் பெயர்' என்னும் தலைப்பின் கீழ்வரும் நூற்பாவும் பிரதிகளில் காணப் படவில்லை. அது வருமாறு :

**சத்தியத்தின் பெயர்**

ஆணை விரதம் வட்டித்தல் சூள்பிர
மாணம் வஞ்சினஞ் சபதஞ் சத்தியம். (2)

## 1774. மெய்யின் பெயர்

வாய்மையும், சரதமும், பரமும், வாயும்,
ஆணையும், திடமும், **மெய்** என அறைவர்.

**மெய்யின் பெயர் : (6)**

1. வாய்மை, 2. சரதம், 3. பரம், 4. வாய், 5. ஆணை, 6. திடம்.

**பாடவேறுபாடு – விளக்கம்**

1 வாய்மை சாதஞ் சரதஞ் சரிதம்வாய்,
வாய்மைசாதஞ் சரத முண்மைவாய்—அச்சுப்பிரதி.

2 : 2 திடனும்

இதனோடு முதற் பதிப்பாசிரியர் இணைத்த புது நூற்பா :

**மற்று மெய்யின் பெயர்**

262. ★ சத்திய மன்ற நிலைமை வேளாண்மை
நிச்சய மென்பவு மெய்யென நிகழும். (3)

## 1775. பொய்யின் பெயர்

மடி, வஞ்சம், மாயம், அனுசிதம், படிறு,
சடம், வக்கிரம், விகிர்தம், நிசிதம், **பொய்யே.**

**பொய்யின் பெயர் : (9)**

1. மடி, 2. வஞ்சம், 3. மாயம், 4. அனுசிதம்,

5. படிறு, 6. சடம், 7. வக்கிரம், 8. விகிர்தம், 9. நிசிதம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 : 2— மாயை 3 அனிசிதம், அனுசுதம்

2 சடமே வக்கிரம் விகிர்த மனிசிதம்
பொய்யே யென்னப் புகன்றனர் புலவர்
தமனிய மென்றுஞ் சாற்று மதற்கே.

2 சடம்வக் கிரம்விகிர்தம் பிசியிவை பொய்யே
சடம்வக் கிரம்விகிர்த நிசிதமிவை பொய்யே.

இதனை அடுத்து அச்சுப்பிரதியில் காணப்படும் நூற்பாவும் ஏடுகளில் இல்லை.

**மற்றும் பொய்யின் பெயர்**

★ மிச்சை வலக்காரந் தள்ளல் வழுது
பெட்டு சாதனை பொய்யின் கூற்றே.

இது 1840 ஆம் ஆண்டுப் பதிப்பில் உடுக்குறியிட்டுக் காட்டப்பட்டுள்ளது. (4)

## 1776. குறளையின் பெயர்

குஞ்சம், பிசினம், **குறளை** ஆகும்.

**குறளையின் பெயர் :** (2)

1. குஞ்சம், 2. பிசினம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2 பிசுனம். (5)

## 1777. புறங்கூற்றின் பெயர்

கொடுவாய் என்பது **புறங்கூற்** றாகும்.

**புறங்கூற்றின் பெயர் :** (1)

கொடுவாய்.



**பாடவேறுபாடு—விளக்கம்**

3—4 புறங்கூற லாகும்.

இதனை அடுத்து வெறும்புறங்கூறலின் பெயர் என்னும் தலைப்பில் அச்சுப்பிரதியில் காணப்படும் நூற்பா ஏடுகளில் இல்லை.

**வெறும்புறங்கூறலின் பெயர்**

★ கொண்டியந் தொடுப்பு வெறும்புறங்கூறல். (6)

## 1778. வாழ்த்தின் பெயர்

ஆசிடை, **வாழ்த்தே.**

**வாழ்த்தின் பெயர் :** (1)

ஆசிடை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு: ஆசிடை வாழ்த்தின் பெயர், ஆசில்வாழ்த்தின் பெயர்.

ஆசிடை யென்பது ஆசில் வாழ்த்தே.

இதனோடு முதற் பதிப்பாசிரியர் இணைத்த புதுநூற்பா :

**மற்றும் ஆசில்வாழ்த்தின் பெயர்**

263. ★ பல்லாண் டாசிகை வாரஞ் சோபனஞ்
சொல்லிய நான்கும் வாழ்த்தினைச் செப்பும்.
(7)

## 1779. திசைச்சொல்லின் பெயர்

தேசிகம், **திசைச்சொல்.**

**திசைச் சொல்லின் பெயர் :** (1)

தேசிகம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

வாழ்த்துக்கும் திசைச் சொல்லுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1778, 1779 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (8)

## 1780. துதித்தலின் பெயர்

வழுத்தல், பரவுதல், ஏத்தல் **துதித்தல்.**

**துதித்தலின் பெயர் : (3)**

1. வழுத்தல், 2. பரவுதல், 3. ஏத்தல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2. பரவல்.

இதனோடு முதற்பதிப்பாசிரியர் இணைத்த புது நூற்பா :

**மற்றுந் துதித்தலின் பெயர்**

264. ★ போற்றல் பரசுத றோத்திர மெச்சல்
சாற்றிய நான்கு மதன்பாற் சாரும்.

பிற்பதிப்புக்கள் இதனையும் திவாகரர் வாக்குடன் இணைத்து ஒன்றாய்த் தந்துள்ளன. (9)

## 1781. வாழ்த்தின் பெயர்

பழிச்சல், புகழ்தல், **வாழ்த்து** எனப்படுமே.

**வாழ்த்தின் பெயர் : (2)**

1. பழிச்சல், 2. புகழ்தல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : தெய்வ வாழ்த்தின் பெயர்.

2 புகழ்ச்சி, பரவுதல்.

புகழ்தலின் பெயர் என்னும் தலைப்பில் 1780, 1781 ஆம் நூற்பாக்கள் ஒன்றாயிணைத்தும் சில பிரதிகளில் பாடம்.

**புகழ்தலின் பெயர்**

வழுத்தல் பரவ லேற்ற றுதித்தல்
பழிச்சல் புகழ்ச்சி வாழ்த்தெனப் படுமே. (10)

## 1782. பலரறி சொல்லின் பெயர்

**பலரறிசொல்,** பெருஞ்சொல்.



**பலரறி சொல்லின் பெயர் : (1)**

பெருஞ்சொல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : பெருஞ்சொல்லின் பெயர்.

பலரறி சொல்லே பெருஞ்சொல் லென்ப—என்பது பிற்பதிப்பு. (11)

## 1783. சிறுசொல்லின் பெயர்

**சிறுசொல்,** பழித்தல்.

**சிறுசொல்லின் பெயர் : (1)**

பழித்தல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : பழித்தலின் பெயர்

1 சிறுச்சொல்

பலரறி சொல்லுக்கும் சிறுசொல்லுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1782, 1783 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (12)

## 1784. பழிமொழியின் பெயர்

அம்பல், கவ்வை, ஏச்சு, அலர், **பழிமொழி.**

**பழிமொழியின் பெயர் : (4)**

1. அம்பல், 2. கவ்வை, 3. ஏச்சு, 4. அலர்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : பழிச்சொல்லின் பெயர்.

3—4 யேசல் பழிச்சொல்.

இதனோடு முதற் பதிப்பாசிரியர் இணைத்த புதுநூற்பா :

**மற்றும் பழிச்சொல்லின் பெயர்**

265. ★ பரிவாதந் தீச்சொல் பழிச்சொல் லாகும்.

மேலும், 'விடாது பேசலின் பெயர்' என அச்சுப்பிரதியில் உள்ள நூற்பா ஏடுகளில் காணப்படவில்லை.

**விடாது பேசலின் பெயர் :**

பிதற்றுதல் விடாது பேச லாகும். (13)

### 1785. அம்பல் என்னும் பெயர்

**அம்பல்,** சிலர் அறிந்து தம்முள் புறங்கூறல்.

**அம்பல் என்னும் பெயர் : (1)**

சிலர் அறிந்து தம்முள் புறங்கூறல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : அம்பலென்னும் சொற்பொருட் பெயர் : தம்முட் புறங் கூறலின் பெயர், சிலர் அறிந்து தம்முள் புறங்கூறலின் பெயர். (14)

### 1786. அலர் என்னும் பெயர்

**அலரே,** பலரும் அறிந்து புறம்தூற்றல்.

**அலர் என்னும் பெயர் : (1)**

பலரும் அறிந்து புறம் தூற்றல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : அலர் என்னும் சொற்பொருட் பெயர், பழிதூற்றலின் பெயர், பலரும் அறிந்து பழிதூற்றுதலின் பெயர்.

3—4 அறிந்து அலர் தூற்றல்.

இதன்பின்னர் அச்சுப்பிரதியில் காணும் இரு நூற்பாக்கள் ஏட்டுப் பிரதிகளில் இல்லை.

**இகழ்ச்சிச் சொல்லின் பெயர்**

ஏயே சீச்சீ யென்னிளி யேஎன

மாய நான்கு மிகிழ்ச்சியி னாகும்.

**அதட்டலின் பெயர்**

அதிர்த்திட டெழித்த லுரப்ப லதட்டல். (15)



### 1787. இடக்கர் என்னும் பெயர்

**இடக்கர்** என்பது மறைத்து மொழி கிளவி.

**இடக்கர் என்னும் பெயர் : (1)**

மறைத்து மொழி கிளவி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : இடக்கர் என்னும் சொற்பொருட் பெயர்.

மறைத்து மொழியும் சொல்லின் பெயர்.

இதனை அடுத்து அச்சுப்பிரதியில் காணும் ஒரு நூற்பா ஏட்டுப் பிரதிகளில் இல்லை.

**மற்று மறைத்து மொழியுஞ் சொல்லின் பெயர்**

★ மற்றுங் கூதன மறைத்துரைக் குஞ்சொல். (16)

1840 ஆம் ஆண்டுப் பதிப்பில் இதற்கு உடுக்குறி இடப்பட்டுள்ளது.

### 1788. புகழின் பெயர்

கீர்த்தி, மேம்பாடு, மீக்கூற்று, ஒளியொடு,

சீர்த்தி, இசை, புகழ் ஆமெனச் செப்புவர்.

**புகழின் பெயர் : (6)**

1. கீர்த்தி, 2. மேம்பாடு, 3. மீக்கூற்று, 4. ஒளி, 5. சீர்த்தி, 6. இசை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 : 4 றொளிசீர், றொளியிசை

2 சீர்த்தியென்றிவை புகழெனச் செப்பினர்

சீர்த்தி யென்றிவை புகழெனப் படுமே

சீர்த்தி யிசையொடு புகழெனச் செப்பினர் (17)

### 1789. ஏற்றமொழியின் பெயர்

தோற்றமும் சொல்மாலையும் ஏற்றம் ஆகும்.

**ஏற்றமொழியின் பெயர் :** (2)

1. தோற்றம், 2. சொன்மாலை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

3—4 ஏற்றமொழியாகும்.

இதனோடு முதற்பதிப்பாசிரியர் இணைத்த புது நூற்பா.

**மற்று மேற்ற மொழியின் பெயர்**

266.★ மெய்ப்பு சுலோகஞ்சீ ரேற்ற மொழி யென்ப.

இதன் பின் அச்சுப்பிரதியில் காணப்படும் பின்வரும் நூற்பாவும் ஏட்டுப் பிரதிகளில் இல்லை.

**ஏற்றத்தின் பெயர்**

கியாதக் கிளவி யேற்றங் கிளக்கும். (18)

## 1790. மிகுபுகழின் பெயர்

சீர்த்தியும் கீர்த்தியும் **மிகுபுகழ்** ஆகும்.

**மிகுபுகழின் பெயர் :** (2)

1. சீர்த்தி, 2. கீர்த்தி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

இதன்பின் அச்சுப்பிரதியில் காணப்படும் பின்வரும் நூற்பா ஏடுகளில் இல்லை.

**மேம்பாட்டின் பெயர்**

உற்ற மேம்பாட்டின் பெயரா கும்மே. (19)

## 1791. ஓர்தலின் பெயர்

ஓர்ப்பு, கடைப்பிடி, குறிக்கோள், தேற்றம் என்று
ஆர்த்த புலவர் அறிந்திசி னோரே.

**ஓர்தலின் பெயர் :** (3)

1. கடைப்பிடி, 2. குறிக்கோள், 3. தேற்றம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு: தேற்றத்தின் பெயர், ஆராய்தலின் பெயர்,



2 3 3—4 அறிந்துரைத்தனரே. (20)

## 1792. தேற்றமொழியின் பெயர்

மாற்று என் கிளவியும், மன்றஎன் கிளவியும்,
தேற்று என் கிளவியும், **தேற்றம்** ஆகும்.

**தேற்ற மொழியின் பெயர் :** (3)

1. மாற்று, 2. மன்ற, 3. தேற்று.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 : 1 மாறென், மற்றென், 3. மன்றென்

2 : 1 தெற்றென், தேறென். (21

## 1793. உறுதிக் கட்டுரையின் பெயர்

கழறலும், இடித்தலும் **உறுதிக் கட்டுரை.**

**உறுதிக் கட்டுரையின் பெயர் :** (2)

1. கழறல், 2. இடித்தல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு: உறுதிச் சொல்லின் பெயர். (22)

## 1794. நிரம்பா மென்சொல்லின் பெயர்

நிழற்றலும், மிழற்றலும் **நிரம்பா மென்சொல்.**

**நிரம்பா மென்சொல்லின் பெயர் :** (2)

1. நிழற்றல், 2. மிழற்றல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

இதனை அடுத்து அச்சுப்பிரதியில் காணும் நூற்பா ஏடுகளில் இல்லை.

**மற்றுநிரம்பா மென்சொல்லின் பெயர்**

மழலை கொஞ்சல் குதலையும் லாப
மிழலை யெனவும் விளம்பு மதற்கே. (23)

## 1795. கூறியது கூறலின் பெயர்

**கூறியது கூறல்** புனருத்திக் கூற்றே.

**கூறியது கூறலின் பெயர் :** (1)
புனருத்தி.

**பாடவேறுபாடு—விளக்கம்**
தலைப்பு : புனருத்தியின் பெயர், புனருத்தியென்பதன் பெயர். (24)

## 1796. சூளுறவின் பெயர்

சூளே, வஞ்சினம், சபதம், **சூளுறவே.**

**சூளுறவின் பெயர் :** (3)
1. சூள், 2. வஞ்சினம், 3. சபதம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**
தலைப்பு : சபதஞ் சொல்லுதலின் பெயர்.
2 வஞ்சம். (25)

## 1797. வாளாது என்னும் பெயர்

வாளாது என் கிளவி பேசாது என்று ஆகும்.

**வாளாது என்னும் பெயர் :** (1)
பேசாது.

**பாடவேறுபாடு—விளக்கம்**
தலைப்பு : (1) வாளாவென்னும் பெயர், பேசாவென்னும் பெயர், பேசாமையின் பெயர்.
வாளாவென் கிளவி பேசாவென் றாகும்
—அச்சுப்பிரதி. (26)

## 1798. நன்னிமித்தத்தின் பெயர்

விரிச்சியும், வாய்ப்புள்ளும் **நற்சொல் நிமித்தம்.**



**நன்னிமித்தத்தின் பெயர் :** (2)
1. விரிச்சி, 2. வாய்ப்புள்.

**பாடவேறுபாடு—விளக்கம்**
தலைப்பு : நன்னிமித்தப் பெயர், நன்னிமித்தச் சொல்லின் பெயர். (27)

## 1799. அழைத்தலின் பெயர்

கூவலும், விளித்தலும், உளைத்தலும், கரைதலும்,
வாவெனலும் **அழைத்தல்** மாற்றம் ஆகும்.

**அழைத்தலின் பெயர் :** (5)
1. கூவல், 2. விளித்தல், 3. உளைத்தல், 4. கரைதல், 5. வாவெனல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**
இதனை அடுத்து அச்சுப் பிரதியில் காணும் நூற்பா ஏடுகளில் இல்லை.

**கமையிலாதழைத்தலின் பெயர்**
கத்தல் கூப்பிடல் கதற லஉற
வொத்த நான்குங் கமையிலா தழைத்தல்.
இதன்பின் முதற்பதிப்பாசிரியர் இணைத்த புதுநூற்பா :

**மற்றுங் கமையிலாதழைத்தலின் பெயர்**
267. ★ இகுத்தல் கேத லாக ருடனை
அகவ னான்கு மழைத்த லாகும். (28)

## 1800. பொரவழைத்தலின் பெயர்

அறைகூவல், **பொர அழைத்தல்.**

**பொரவழைத்தலின் பெயர் :** (1)
அறைகூவல். (29)

## 1801. கீழறுத்தலின் பெயர்

அறைபோதல், **கீழறுத்தல்.**

**கீழறுத்தலின் பெயர் :** (1)

அறைபோதல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

பொரவழைத்தலுக்கும் கீழறுத்தலுக்கும் பெயர் என்னும் தலைப்பில் **1800, 1801** ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் **சிலர்** கொள்வர். (30)

## 1802. முதுச்சொல்லின் பெயர்

மொழிமை, **முதுச்சொல்.**

**முதுச்சொல்லின் பெயர் :** (1)

மொழிமை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : முதுசொல்லின் பெயர்

மொழிமை முதுசொல்—அச்சுப்பிரதி. (31)

## 1803. காரணச் சொல்லின் பெயர்

கதை, **காரணச்சொல்.**

**காரணச் சொல்லின் பெயர் :** (1)

கதை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

முதுசொல்லுக்கும் காரணச் சொல்லுக்கும் பெயர் என்னும் தலைப்பில் **1802, 1803** ஆம் நூற்பாக்களை 'முதுமை முது சொல் கதைகா ரணச் சொல்' என ஒரே நூற்பாவாகவும் கொள்வர். (32)

## 1804. உபசாரச் சொல்லின் பெயர்

முகமனும், நன்னயக் கிளவியும், **உபசாரம்.**

**உபசாரச் சொல்லின் பெயர் :** (2)

1. முகமன், 2. நன்னயக் கிளவி.



**பாடவேறுபாடு—விளக்கம்**

4 உபசாரச் சொல்.

இதனோடு முதற் பதிப்பாசிரியர் தொடுத்த புது நூற்பா :

**மற்றுமுபசாரச் சொல்லின் பெயர்**

268. ★ சம்மானமு முபசாரச் சொல்லே. (33)

## 1805. நயச் சொல்லின் பெயர்

அசதி, நகையே, **நயக்கிளவி** ஆகும்.

**நயச் சொல்லின் பெயர் :** (2)

1. அசதி, 2. நகை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : பரியாசச் சொல்லின் பெயர்

அசதி நகைநயக் கிளவி யாகும்—என்றும் பாடம். (34)

## 1806. வினாவலின் பெயர்

**வினாவல்,** கடாவல்.

**வினாவலின் பெயர் :** (1)

கடாவல். (35)

## 1807. எதிர்மொழியின் பெயர்

விடை, அதற்கு **எதிர்மொழி.**

**எதிர்மொழியின் பெயர் :** (1)

விடை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : வினாவிற் கெதிர்மொழியின் பெயர்.

வினாவலுக்கும் அதற்கெதிர்மொழிக்கும் பெயர் என்னும் தலைப்பில் **1806, 1807** ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர்.

இதன்பின் அச்சுப்பிரதியில் காணப்படும் இருநூற்பாக்கள் ஏடுகளில் இல்லை.

**வினாவும் விடையுங் கூடிய பொருள்**

சல்லாபம் வினாவிடை தழுவும் பொருளே.

**பொருளின்மையின் பெயர்**

அநர்த்தம் பொருளின்மை யாகு மென்ப. (36)

## 1808. நெடுமொழி என்னும் பெயர்

**நெடுமொழி,** தன்மேம் பாடுதான் நிகழ்த்தல்.

**நெடுமொழி என்னும் பெயர் :** (1)

தன் மேம்பாடு தான் நிகழ்த்தல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : நெடுமொழியின் பெயர், தன் மேம்பாடு கூறுதலின் பெயர். (37)

## 1809. அசைச்சொல்லின் பெயர்

அன்றுஎன் கிளவியும், இன்றுஎன் கிளவியும்
ஆம்என் கிளவியும் ஆகும் **அசைச்சொல்.**

**அசைச் சொல்லின் பெயர் :** (3)

1. அன்று, 2. இன்று, 3. ஆம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : ஆமென்னுஞ் சொல்லின் பெயர்.
2 : 3—4 ஆகு மென்ப. (38)

## 1810. அம்ம என்னும் பெயர்

**அம்ம,** கேட்பிக்கும்.

**அம்ம என்னும் பெயர் :** (1)

கேட்பிக்கும் கூற்று,



**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : கேட்பிக்கும் உரையசைச் சொல்லின் பெயர், எதிர்முகமாக்குஞ் சொல்லின் பெயர். (39)

## 1811. உரையசையின் பெயர்

ஆங்க, **உரையசை.**

**உரையசையின் பெயர் :** (1)

ஆங்க.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : உரையசைச் சொல்லின் பெயர்.

அம்ம என்னும் பெயர் உரையசைச் சொல்லின் பெயர் என்னும் தலைப்பில் 1810, 1811 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் கொள்வர் சிலர். (40)

## 1812. முன்னிலையசைச் சொல்லின் பெயர்

மியா, இக, மோ, மதி, இகும், சின், என்னும்
ஆவயின் ஆறும் **முன்னிலை அசைச்சொல்.**

**முன்னிலையசைச் சொல்லின் பெயர் :** (6)

1. மியா, 2. இக, 3. மோ, 4. மதி, 5. இகும், 6. சின். (41)

## 1813. அசைச் சொல்லின் பெயர்

யா, கா, பிற, பிறக்கு, அரோ, போ, மாது என வரூஉம்
ஆயேழ் சொல்லும் **அசைநிலைக் கிளவி.**

**அசைச் சொல்லின் பெயர் :** (7)

1. யா, 2. கா, 3. பிற, 4. பிறக்கு, 5. அரோ, 6. போ, 7. மாது.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 : 1 ஆகாபிற. (42)

## 1814. இசைநிறையசைநிலையின் பெயர்

ஏயும் குரையும் இசைநிறை அசைநிலை
ஆயிரண்டு ஆகும் இயற்கைத்து என்ப
ஒப்பில் போலியும் அப்பொருட்டு ஆகும்.

**இசைநிறையசைநிலையின் பெயர் :** (3)

1. ஏ, 2. குரை, 3. போலும்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

அச்சுப் பிரதியில் இந்நூற்பா சற்று வேறுபட
ஏயுங் குரையு மிசைநிறை யசைநிலை
என்றும்,
ஒப்பில் போலியு மப்பொருட் டாகும்
என்றும் இருநூற்பாக்களாகத் தரப்பட்டுள்ளன. (43)

## 1815. ஒடு என்னும் பெயர்

ஒடுஎன் கிளவி உடனிகழ்வு ஆகும்.

**ஒடு என்னும் பெயர் :** (1)

உடனிகழ்வு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு: உடனிகழ்வின் பெயர், உடனிகழ்விடைச் சொல்லின் பெயர். (44)

## 1816. சாரியையின் பெயர்

இன்னே, வற்றே, அத்தே, அம்மே,
ஒன்னே, ஆனே, அக்கே, இக்கே,
அன்என் கிளவி உளப்படப் பிறவும்.
அன்ன என்ப சாரியை மொழியே.

**சாரியையின் பெயர் :** (9)

1. இன், 2. வற்று, 3. அத்து, 4. அம், 5. ஒன், 6. ஆன், 7. அக்கு, 8. இக்கு 9. அன்.



**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : சாரியை மொழியின் பெயர்.
1 : 3 அற்றே
3 : 3 உட்படப். (45)

## 1817. இடைச்சொல்லின் பெயர்

அம், ஆம், எம், ஏம், நம், தம், நும், ஏ,
உம்மே, அன், ஆன், முறை, கெழு, ஞான்றே,
அல், ஆல், அன்றே, எனவே, மன்னே,
தில்லை, வான், பாக்கு, தெய்யவும் இடைச்சொல்.

**இடைச்சொல்லின் பெயர் :** (23)

1. அம், 2. ஆம், 3. எம், 4. ஏம், 5. நம், 6. தம், 7. நும், 8. ஏ, 9. உம், 10. அன், 11. ஆன், 12. முறை, 13. கெழு, 14. ஞான்று, 15. அல், 16. ஆல், 17. அன்று, 18. என, 19. மன், 20. தில்லை, 21. வான், 22. பாக்கு, 23. தெய்ய.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 : 3 தம்நம்
2 : 3 உறைகெழு—அச்சுப்பிரதி
4 : 1 தில்லே பான். (46)

## 1818. எழுத்தின் சாரியையின் பெயர்

காரமும், கரமும், கானொடு, சிவணி
நேரத் தோன்றும் எழுத்தின் சாரியை
ஏனமும், ஒனமும் எழுத்தின் சாரியை.

**எழுத்தின் சாரியையின் பெயர் :** (5)

1. காரம், 2. கரம், 3. கான், 4. ஏனம், 5. ஒனம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : எழுத்துச்சாரியையின் பெயர்.

3 : 12 ஏனவு மோனவு

இறுதியடி சில பிரதிகளில் இல்லை ; அச்சுப் பிரதியிலும் இல்லை. (47)

## 1819. வேற்றுமையின் பெயர்

ஐ, ஒடு, கு, இன், அது, கண் என்னும்
அவ் ஆறு என்ப **வேற்றுமை** உருபே.

**வேற்றுமையின் பெயர் :** (6)

1. ஐ, 2. ஒடு, 3. கு, 4. இன், 5. அது, 6. கண்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : வேற்றுமை யுருவின் பெயர். (48)

## 1820. சுட்டின் பெயர்

அ, இ, உ, அம்மூன்றும் **சுட்டே.**

**சுட்டின் பெயர் :** (3)

1. அ, 2. இ, 3. உ.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2 இம்மூன்று—பிற்பதிப்புக்கள். (49)

## 1821. வினாவின் பெயர்

ஆ, ஏ, ஓ, அம் மூன்றும் **வினா.**

**வினாவின் பெயர் :** (3)

1. ஆ, 2. ஏ, 3. ஓ. (50)

## 1822. ஐயுற்ற சொல்லின் பெயர்

யாதும், எவனும், கொல்லும், என்னையும்
ஆகும் என்ப, **ஐயுற்ற கிளவி.**

**ஐயுற்ற சொல்லின் பெயர் :** (4)

1. யாது, 2. எவன், 3. கொல், 4. என்னை.



**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : ஐயுறு சொல்லின் பெயர்.

1 யாதுங் கொல்லு மெவனு மென்னையும்

2 3—4 ஐயுறற் கிளவி. (51)

## 1823. இடத்தின் ஐயுற்ற சொல்லின் பெயர்

யாண்டையும் யாங்கும் இடத்தி னையுற்ற சொல்.

**இடத்தின் ஐயுற்ற சொல்லின் பெயர் :** (2)

1. யாண்டை, 2. யாங்கு.

**பாடவேறுபாடு – விளக்கம்**

தலைப்பு : இட ஐயச் சொல்லின் பெயர். (52)

## 1824. கல்வியின் பெயர்

உறுதியும், சால்பும், ஓதியும், அறிவும்,
கலையும், கேள்வியும் **கல்வி** ஆகும்.

**கல்வியின் பெயர் :** (6)

1. உறுதி, 2. சால்பு, 3. ஓதி, 4. அறிவு, 5. கலை, 6. கேள்வி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2 : 2 கிளவியும்

இதனோடு முதற் பதிப்பாசிரியர் இணைத்த நூற்பா :

**மற்றுங் கல்வியின் பெயர்**

269. ★ வித்தை சாலம் விஞ்சை யூதிய
மற்றிந் நான்குங் கல்வியி னாமம்.

இதன்பின் அச்சுப்பிரதியில் காணும் பின்வரும் நூற்பா ஏட்டுப் பிரதிகளில் இல்லை.

**கற்றலின் பெயர்**

தவிலல் கெழுமல் பயிலலுங் கற்றல்.

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் இணைத்த புது நூற்பா :

**படித்தலின் பெயர்**

270. ★ பாடல் வாசித்தல் பயிலல் கற்ற
லோத லத்தி யயனமும் படித்தல். (53)

## 1825. வேதத்தின் பெயர்

சுருதி, மறை, சாகை, எழுதாக் கிளவி,
ஆதிநூல் என்ப வேதநூல் பெயரே.

**வேதத்தின் பெயர் : (5)**

1. சுருதி, 2. மறை, 3. சாகை, 4. எழுதாக்கிளவி, 5. ஆதிநூல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : எழுதாக் கேள்வியின் பெயர், வேதநூலின் பெயர்.

1 : 3—4 எழுதாக் கேள்வி—அச்சுப்பிரதி.

இதன் முதலடியை 'எழுதாக்கேள்வியின் பெயர்' என்றும், இரண்டாம் அடியை 'வேதநூலின் பெயர்' என்றும் தலைப்பிட்டுத் தனித்தனி நூற்பாக்களாக அச்சுப்பிரதி கொண்டுள்ளது.

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புது நூற்பா.

**மற்றும் வேதநூலின் பெயர்**

271. ★ இருக்கோத் தாரணம் வேத மென்ப.

பிற்பதிப்புக்களில் இதனையும் முந்திய நூற்பாவுடன் இணைத்து வேதநூலின் பெயர் என ஒரு நூற்பாவாக அமைத்துள்ளனர். (54)

## 1826. வேதத்தின் இருவகைப்பொருளின் பெயர்

ஞான பாகையும், கரும பாகையும்
ஆயிரு பாற்பொருள் வேதநூற்கே.



**வேதத்தின் இருவகைப் பொருளின் பெயர் : (2)**

1. ஞானபாகை, 2. கருமபாகை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : வேதநூலின் இருவகைப் பொருளின் பெயர்

2 : 2 பாற்பொருள். (55)

## 1827. ஆரணம் என்னும் பெயர்

ஆரணம், வேதத்தின் ஞான பாகை.

**ஆரணம் என்னும் பெயர் : (1)**

வேதத்தின் ஞானபாகை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : வேதத்தின் ஞானபாகையின் பெயர், ஞானபாகையின் பெயர். (56)

## 1828. உபநிடதம் என்னும் பெயர்

உபநிடதம், வேதத்தின் உட்பொருள் நுட்பம்.

**உபநிடதம் என்னும் பெயர் : (1)**

வேதத்தின் உட்பொருள் நுட்பம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : உபநிடதத்தின் பெயர்

1 உபநிடம் 2 ஆரணத்தி 3—4 உட்பொருளி நுட்பம். (57)

## 1829. வைதிகத்தின் பெயர்

வைதிகம், வேதமொழி மாற்றம் ஆகும்.

**வைதிகத்தின் பெயர் (1)**

வேதமொழி மாற்றம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு: வைதீகத்தின் பெயர், வைதிகம் என்னும் சொற்பொருட் பெயர்.

1 வைதிகம் 3 மார்க்கம், மாற்கம் (58)

## 1830. முதல் வேதத்தின் பெயர்

இருக்கு **முதல் வேதம்**, பவுடிகம் எனப்படும்.

**முதல் வேதத்தின் பெயர் :** (2)

1. இருக்கு, 2. பவுடிகம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

3 பௌடிகம், பௌழிகம். (59)

## 1831. இரண்டாம் வேதத்தின் பெயர்

**இரண்டாம் வேதம்** தயித்திரியம் எனப்படும்.

**இரண்டாம் வேதத்தின் பெயர் :** (1)

தயித்திரியம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

3—4 தைத்திரிய மென்ப, தைத்திரிய மெனவே. (60)

## 1832. மூன்றாம் வேதத்தின் பெயர்

**மூன்றாவது** சாமவேதம், கீதநடை ஆகும்.

**மூன்றாம் வேதத்தின் பெயர் :** (1)

சாம வேதம், கீதநடையது.

**பாடவேறுபாடு—விளக்கம்**

மூன்றாம் வேதம் சாம மாகும்.

மூன்றாவது சாமங் கீதநடை சாரும் - அச்சுப்பிரதி. (61)

## 1833. நான்காம் வேதத்தின் பெயர்

**நான்காம் வேதம்** அதர்வணம் எனப்படும்.



**நான்காம் வேதத்தின் பெயர் :** (4)

அதர்வணம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

3—4 அதர்வண மாகும். (62)

## 1834. நூலின் பெயர்

அதிகாரம், ஆரிடம், பனுவல், ஆகமம்,
பிடகம், தந்திரம் **நூலின் பெயரே.**

**நூலின் பெயர் :** (6)

1. அதிகாரம், 2. ஆரிடம், 3. பனுவல், 4. ஆகமம், 5. பிடகம், 6. தந்திரம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

இதனை இரு நூற்பாக்களாக அச்சுப்பிரதி பின்வருமாறு கொண்டுள்ளது; சில பிரதிகளும் அவ்வாறு உள்ளன.

**பனுவலின் பெயர்**

அதிகார மாரிடம் பனுவலாகும்.

**நூலின் பெயர்**

பிடகம் தந்திரம் நூலின் பெயரே.

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புது நூற்பா.

**மற்று நூலின் பெயர்**

272. ★ ஆகமம் பனுவ லாரிடஞ் சமயஞ்
சூத்திர மைந்து நூலினைத் துலக்கும்.

இதன் பின் நூல்முடிபின் பெயர் என்னும் தலைப்பில் அச்சுப்பிரதியில் காணும் பின்வரும் நூற்பா ஏடுகளில் இல்லை.

**நூன்முடிபின் பெயர்**

படலஞ் சருக்கம் பரிச்சேதங் காண்ட
மிலம்பக மத்தியாய மெய்துநூன் முடிபே. (63)

## 1835. பாயிரத்தின் பெயர்

**பாயிரம்,** நூன்முகம், புறவுரை எனப்படும்.

**பாயிரத்தின் பெயர் :** (2)

1. நூன்முகம், 2. புறவுரை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

3—4 புறவுரையெனப் படுமே.

இதனோடு முதற் பதிப்பாசிரியர் இணைத்த புதுநூற்பா.

**மற்றும் பாயிரத்தின் பெயர்**

273. ★ பதிகம் புனைந்துரை தந்துரையு மதுவே.

இதனையும் முந்திய நூற்பாவுடன் இணைத்து ஒரே நூற்பாவாகப் பிற பதிப்புக்கள் தரும். (64)

## 1836. மூதுரையின் பெயர்

**மூதுரை,** பழமொழி, முதுமொழி எனப்படும்.

**மூதுரையின் பெயர் :** (2)

1. பழமொழி, 2. முதுமொழி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : பழமொழியின் பெயர்.

3—4 முதுமையு மெனப்படும்.

இதனோடு முதற்பதிப்பாசிரியர் இணைத்த புதுநூற்பா :

**மற்று மூதுரையின் பெயர் :**

274. ★ மொழிமை முன்சொல் முதுசொல் பழஞ்சொன்
மொழிந்த நான்கும் மூதுரை யென்ப. (65)

## 1837. பாடத்தின் பெயர்

ஓதன்மை யாடல், **பாடம்** ஆகும்.



**பாடத்தின் பெயர் :** (1)

ஓதன்மையாடல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : ஓதலின் பெயர்

3—4 பாட லாகும். (66)

## 1838. நூற்பாவகவலின் பெயர்

**நூற்பா—அகவல்** நுணங்க நாடின்
சூத்திரம் குறித்த யாப்பிற்று ஆகி,
அடிவரை இன்றி விழுமிதின் நடக்கும்.

**நூற்பாவகலின் பெயர் :**

சூத்திரம் குறித்த யாப்பிற்றாகி அடிவரையின்றிச் சிறப்புற நடப்பது.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : நூற்பாவகலென்பது, நூற்பாவகவல் என்னும் சொற்பொருட் பெயர்.

2 : 3—4 யாப்பினவாகி

3 : 1—2 இசைவரம் பின்றி. (67)

## 1839. ஓத்தின் பெயர்

நேரின மணியை நிரல்பட வைத்தாங்கு
ஓர்இனப் பொருளை ஒருவழி வைப்பது
**ஒத்து** என மொழிப உயர்மொழிப் புலவர்.

**ஒத்தின் பெயர் :**

ஒருவகையான மணிகளை வரிசைப் பட வைப்பது போல ஓர்இனமான பொருள்களை ஒன்றாக அமைப்பது.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : ஒத்தென்னும் பெயர், ஓத்தென்னும் சொற்பொருட் பெயர்.

3 : 3 உயர்நடைப், உயர்நிலைப். (68)

1840. படலம் என்னும் பெயர்

ஒரு நெறி இன்றி விரவிய பொருளால்
பொதுமொழி தொடரின், அது படலம் ஆகும்.

**படலம் என்னும் பெயர் :**

ஒரு முறையாலன்றிக் கலந்த வேறு பொருள்களும் ஒரு பொதுப் பெயரின் கீழ் வருவது.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : படலமென்னும் சொற்பொருட் பெயர். (69)

1841. வேற்றிசைப்பா என்னும் பெயர்

சருக்க முடிவினும் இலம்பக முடிவினும்
விருத்த நடையது வேற்றிசைப் பாவே.

**வேற்றிசைப்பா என்னும் பெயர் :**

சருக்கமுடிவினும் இலம்பக முடிவினும் வேறுபட்ட சந்த நடையில் அமைவது.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : வேறிசைப்பாவின் பெயர், வேற்றிசைப்பா என்னும் சொற்பொருட் பெயர், வேற்றிசைப் பென்னும் சொற்பொருட் பெயர்.

3—4 வேறிசைப்பாவே, வேறிசைப் பாகும். (70)

1842. உரைப்பொருளின் பெயர்

விரித்துரை (மெய்) உரைப் பொருளது ஆகும்.

**உரைப் பொருளின் பெயர் :** (1)

விரித்துரை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : விரித்துரையின் பெயர்



3—4 பொருள வாகும்
விரித்துரை மெய்யுரை உரைப்பொரு ளாகும்
—அச்சுப்பிரதி. (71)

1843. பொழிப்பு என்னும் பெயர்

பொழிப்பு எனப்படுவது பொருந்திய பொருளைப்
பிண்ட மாகக் கொண்டு உரைப் பதுவே.

**பொழிப்பு என்னும் பெயர்:** (1)

பாடலுள் பொருளைத் திரட்டித் தொகுத்து உரைப்பது.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : பொழிப்புரைப் பெயர், பொழிப்புரையின் பெயர். (72)

1844. பதிகம் என்னும் பெயர்

பதிகக் கிளவி பல்வகைப் பொருளைத்
தொகுதி யாகச் சொல்லுதல் ஆகும்.

**பதிகம் என்னும் பெயர்:** (1)

நூலுள் அமைந்த பலவகையான பொருள்களையும் தொகுத்து உரைப்பது.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : பதிகம் என்னும் சொற்பொருட் பெயர்.

2 : 3—4 சொல்லுவ தாகும், சொல்லுதறானே, சொல்லுவர் புலவர். (73)

1845. இலக்கியத்தின் பெயர்

இலக்கியம், உதாரணம், எடுத்துக் காட்டல்.
ஞாபகமும் பிசியும் அப்பொருள் நடைய.

**இலக்கியத்தின் பெயர் :** (4)

1. உதாரணம், 2. எடுத்துக்காட்டல், 3. ஞாபகம், 4. பிசி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : இலக்கியம் என்னும் பெயர், உதாரணத்தின் பெயர்.

அச்சுப்பிரதியில் நூற்பா அமைப்பு பின்வருமாறு :

**இலக்கியத்தின் பெயர்**

இலக்கிய முதாரண மெடுத்துக் காட்டல்.

இதனோடு முதற்பதிப்பாசிரியர் இணைத்த நூற்பா :

**மற்றுமிலக்கியத்தின் பெயர்**

275. ✶ இதிகா சமுமே யிலக்கிய மாகும்.

இந்நூற்பாவைப் பிற்பதிப்புக்களில் இலக்கியத்தின் பெயர் கூறும் முந்திய நூற்பாவுடன் ஒருசேர இணைத்து அமைத்துள்ளனர்.

இதன் பின்னர்,

**அரும்பொருளின் பெயர்**

ஞாபகமும் பிசியு மரும்பொரு ணடைய. (74)

## 1846. பாவின் பெயர்

தூக்கும், யாப்பும், செய்யுளும், கவியும்,
பாட்டும், கவிதையும் பாஎனப் படுமே.

**பாவின் பெயர் : (6)**

1. தூக்கு, 2. யாப்பு, 3. செய்யுள், 4. கவி, 5. பாட்டு, 6. கவிதை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 தூக்குங் கவியுஞ் செய்யுளுந் தொடர்பும்
தூக்குந் தொடர்புஞ் செய்யுளுங் கவியும். (75)

## 1847. வெண்பாவின் பெயர்

முதற்பா, வெண்பா.



**வெண்பாவின் பெயர் : (1)**

முதற்பா.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1. முதுப்பா. (76)

## 1848. கலிப்பாவின் பெயர்

முரற்கை, கலிப்பா.

**கலிப்பாவின் பெயர் : (1)**

முரற்கை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 முரட்கை, முரக்கை

வெண்பாவுக்கும் கலிப்பாவுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1847, 1848 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (77)

## 1849. ஆசிரியப்பாவின் பெயர்

அகவலும், தொகையும் ஆசிரியப் பாவே.

**ஆசிரியப்பாவின் பெயர் : (2)**

1. அகவல், 2. தொகை. (78)

## 1850. வண்ணத்தின் பெயர்

அராகம், முடுகியல், வண்ணம் ஆகும்.

**வண்ணத்தின் பெயர் : (2)**

1. அராகம், 2. முடுகியல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : வண்ணகத்தின் பெயர் —அச்சுப்பிரதி

3—4 வண்ணக மாகும் —அச்சுப்பிரதி. (79)

## 1851. குளகச் செய்யுளின் பெயர்

குற்றெழுத்துத் தொடரின், அது **குளகச் செய்யுள்.**

**குளகச் செய்யுளின் பெயர் :**

குற்றெழுத்துத் தொடர்ந்து வரும் செய்யுள் வகை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : குளகச் செய்யுள் என்னும் பெயர் (80)

## 1852. சந்தப்பாட்டின் பெயர்

இருபது மேலும் இருமூன்று எழுத்து நான்கு
அடியும் வருவது **சந்தப் பாட்டே,**

**சந்தப்பாட்டின் பெயர் :**

அடிதோறும் இருபத்தாறு எழுத்தைக் கொண்டு அமையும் நான்கடிச் செய்யுள்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 : 1—2 இருபதின் மேலும், 4 எழுத்து, எழுத்தும்.
2 வருவது சந்தப் பாட்டாகும்மே.
வருவது சந்தப் பாட்டென வழங்கும். (81)

## 1853. தாண்டகம் என்னும் பெயர்

மற்று அதன் மிகுத்த சொல் தரும்பெயர்த் **தாண்டகம்.**

**தாண்டகம் என்னும் பெயர் :**

அடிக்கு இருபத்தாறு எழுத்தின் மேற்படவரும் சொற்களைக் கொண்ட பாட்டு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2—4 மிகுதிச் சொற்பெயர் தாண்டகம். (82)

## 1854. கணக்கின் பெயர்

எழுத்தும், எண்ணும், **கணக்கு** எனப்படுமே.



**கணக்கின் பெயர். (2)**

1. எழுத்து, 2. எண்.

**பாடவேறுபாடு விளக்கம்**

தலைப்பு: கணக்கு என்னும் சொற்பொருட்பெயர் (83)

## 1855. எண்ணின் பெயர்

**எண்ணே,** கரணம், கணிதம் என்ப.

**எண்ணின் பெயர் (2)**

1. கரணம், 2. கணிதம்,

**பாட வேறுபாடு விளக்கம்**

எண்ணே கணிதம் கரண மலகே
எண்ணே கரணங் கணித மலகே-அச்சுப்பிரதி (84)

## 1856. நால்வகை எழுத்தின் பெயர்

வடிவெழுத்து, பெயரெழுத்து, முடிவெழுத்து, தன்மையெழுத்து என எழுத்தின் பெயர்இயம் பினரே.

**நால்வகை எழுத்தின் பெயர்: (4)**

1. வடிவெழுத்து, 2. பெயரெழுத்து, 3. முடிவெழுத்து, 4. தன்மையெழுத்து.

**பாடவேறுபாடு -விளக்கம்**

தலைப்பு: எழுத்தினத்தின் பெயர், எழுத்தாவன.

பெயரெழுத்து முடிவெழுத்து வடிவெழுத்துத் தன்மை
2: 2: 3 எழுத்துப் பெயர் (85)

## 1857. ஒற்றெழுத்தின் பெயர்

விராமமும், புலுதமும், மெய்யும் **ஒற்று எழுத்தே.**

**ஒற்றெழுத்தின் பெயர் (3)**

1. விராமம், 2. புலுதம், 3. மெய்,

**பாடவேறுபாடு-விளக்கம்**

1. விராமையும்

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் இணைத்த புது நூற்பா:

**மற்று மொற்றெழுத்தின் பெயர்**

276. தனிநிலை புள்ளி யாய்த மொற்றெழுத்தே,

பிற்பதிப்புகள் இந்நூற்பாவுக்கு **ஆய்தத்தின் பெயர்**

என்று தலைப்பிட்டு,

தனிநிலை புள்ளி யாய்த வெழுத்தே

எனச் சிறிது மாற்றியமைத்துள்ளன. (86)

1858. முதுகாஞ்சி என்னும் பெயர்

நல்லவர் உறைஉலகம் எய்த, அப் புலவர்

ஒழுக்கம் கொளுத்துமுறை உயிர்முது காஞ்சி

**முதுகாஞ்சிஎன்னும் பெயர்:**

நல்லவர் உலகம் எய்தும் வகை புலவர்

ஒழுக்கம் கொளுத்தும் முறையது.

**பாடவேறுபாடு -விளக்கம்**

தலைப்பு: உயர் மொழிக்காஞ்சி என்பது - **அச்சுப்பிரதி.**

1: 3-4 எய்தப் புலவர்- அச்சுப்பிரதி.

2: 3-4 உயிர்மொழிக் காஞ்சி -அச்சுப்பிரதி. (87)

1859. முதுமொழிக்காஞ்சி என்னும் பெயர்

கழிந்தோர் ஏனை ஒழிந்தோர்க்குக் காட்டிய

முறைமை ஆகும் முதுமொழிக் காஞ்சி.

**முதுமொழிக்காஞ்சி என்னும் பெயர்:**

கழிந்தோர் ஏனை ஒழிந்தோர்க்குக் காட்டிய முறையது,

**பாடவேறுபாடு-விளக்கம்**

தலைப்பு: முதுமொழிக் காஞ்சியின் பெயர், முதுமொழிக் காஞ்சி (88)

1860. பேரியற் காஞ்சி என்னும் பெயர்

**கேட்டியல்பு உரைப்பது பேரியற் காஞ்சி.**

**பேரியற் காஞ்சி என்னும் பெயர்:** கேட்டியல்பு உரைப்பது.

**பாடவேறுபாடு-விளக்கம்**

தலைப்பு: பேரியற் காஞ்சியின் பெயர்,
பேரியற் காஞ்சியென்பது.

2. உரைத்தல், உரைத்தது (89)

1861. பொருண்மொழிக் காஞ்சி என்னும் பெயர்

அருள்மொழி மெய்ப்பொருள் பொருள் மொழிக் காஞ்சி.

**பொருண் மொழிக் காஞ்சி என்னும் பெயர்:** அருள்மொழி மெய்ப் பொருள் உரைப்பது.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு: பொருண்மொழிக் காஞ்சியின் பெயர், பொருண் மொழிக் காஞ்சி யென்பது. (90)



1862. முதுபாலை என்னும் பெயர்

நனிமிகு சுரத்திடைக் கணவனை இழந்து

தனிமகள் புலம்பல் முதுபாலை ஆகும்.

**முதுபாலை என்னும் பெயர்:** சுரத்திடைக் கணவனை இழந்து தனிமகள் புலம்புவது.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு: முதுபாலையின் பெயர், முதுபாலை **யென்பது.**

2:2 புலம்பியது. (91)

1863. குறுங்கலி என்னும் பெயர்

**தன்னுதல் துறந்தவட்கு உற்று இசைப்புழி ஆவள்**

**முன் நின்று உரைத்தல் குறுங்கலி ஆகும்.**

**குறுங்கலி என்னும் பெயர்:** நன்னுதலைத் துறந்தவளைக் கண்டு இசைப்புழி அவள் முன் நின்று உரைப்பது.

**பாட வேறுபாடு விளக்கம்**

தலைப்பு: குறுங்கலியின் பெயர். குறுங்கலி யென்பது

2:2 உரைப்பது (92)

1864. பாசறைமுல்லை என்னும் பெயர்

பாசறை முல்லைத் தலைவன் பாசறைக் கண்

மாதரை உள்ளும் மரபிற்று ஆகும்.

**பாசறைமுல்லை என்னும் பெயர்:** தலைவன் பாசறைக்கண் தலைவியை உள்ளும் மரபிற்று.

**பாட வேறுபாடு விளக்கம்**

தலைப்பு: பாசறை முல்லை யென்பது, பாசறைத் தலைவன் தலைவியை நினையும் பெயர்.

2:2 உள்கும் (93)

1865. இல்லாண் முல்லை என்னும் பெயர்

இல்லாண் முல்லை பாசறைத் தலைவனை

நல்லாண் நினையும் நலத்தது ஆகும்.

**இல்லாண்முல்லை என்னும் பெயர்:** பாசறைத் தலைவனை நல்லாள் நினையும் நலத்தது.

**பாட வேறுபாடு விளக்கம்**

தலைப்பு: இல்லாண் முல்லையின் பேர், இல்லாண் முல்லை யென்பது, தலைமகள் பாசறைத் தலைவனை நினையும் பெயர்.

இதன்பின் யாழ்நரம்பினோசையின் பெயர் என்பதும் வள்ளைப்பாட்டு என்பது குறித்தும் அமைந்த நூற்பாக்கள் சில பிரதிகளில் காணப்படுகின்றன. இவை 1872, 1873 ஆம் நூற்பாக்களாக இப்பதிப்பில் உள்ளமை காண்க. (94)

1866. இசைப்பாட்டின் பெயர்

பாணி, வரி, பண், இசை, கானம், கொளையே
பாணே, கீதம், கந்தருவம், கேயம்,
காமரம் என்று இவை இசைப்பாட்டு ஆம்கு.

**இசைப்பாட்டின் பெயர்** (11)

1. பாணி, 2. வரி, 3. பண், 4. இசை, 5. கானம், 6. கொளை, 7. பாண், 8. கீதம், 9. கந்தருவம், 10, கேயம், 11. காமரம். (95)

1867. ஏனை என்னும் பெயர்

ஏனை என்பது ஓர் இசைவிகற்பம் ஆகும்.

**ஏனை என்னும் பெயர்:** ஓர் இசை விகற்பம்

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : இசை விகற்பத்தின் பெயர்

1–2 ஏனைய தென்பதோ

இதனை அடுத்து அச்சுப்பிரதியில் வல்லிசையின் பெயர்) என்னும் தலைப்பில் பின்வரும் நூற்பா காணப்படுகிறது.

உச்சந் தார மோங்கும் வல்லிசை.

ஏட்டுப் பிரதிகளில் இஃது இல்லை. (96

1868. மந்தவிசையின் பெயர்

காகுளி, மந்த இசை.

**மந்தவிசையின் பெயர்:** [1] காகுளி (97)

1869. இன்னிசையின் பெயர்

இராகம், இன்னிசை.

**இன்னிசையின் பெயர் :** (1) இராகம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

மந்தவிசைக்கும் இன்னிசைக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1868, 1869 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் கொள்வர். (98)

1870. சமனிசையின் பெயர்

மந்தம், மத்திமம், வழங்கும் சமனிசை.

**சமனிசையின்பெயர் (2)**

1. மந்தம், 2. மத்திமம்,

இந்நூற்பாச் சில பிரதிகளில் காணப்படவில்லை. (99)



**1871.** பல்லியந் தழுவுபாடலின் பெயர்

சங்கீதம் பல்லியம் பாடல்.

**பல்லியந் தழுவு பாடலின் பெயர் (1)** சங்கீதம்

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு: சங்கீதம் என்னும் பெயர், கீதம் பாடலின் பெயர் (100)

1872. யாழ்நரம்பின் ஓசையின் பெயர்

எழாலே, தந்திரி, நரம்பின் ஓசை.

**யாழ் நரம்பின் ஓசையின் பெயர் (2)**

1. எழால் 2. தந்திரி

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு: தந்திரி நரம்பினோசைக்கும் பெயர். (101)

1873. வள்ளைப்பாட்டு என்னும் பெயர்

ஊழ்முறை உலக்கை யோச்சி, வாழிய
தருமனைக் கிழவர் தம்வளம் கூறி,
மகளிர் பாடுவது வள்ளைப் பாட்டே.

**வள்ளைப்பாட்டு என்னும் பெயர்:** ஊழ்முறை உலக்கை ஓச்சி மனைக்கிழவர் தம் வளம் கூறி மகளிர் பாடுவது.

**பாட வேறுபாடு—விளக்கம்**

தலைப்பு: வள்ளைப்பாட்டென்னும் சொற்பொருட் பெயர்

இதனை அடுத்து அச்சுப்பிரதியில் காணப்படும் மூன்று நூற்பாக்கள் ஏட்டுப் பிரதிகளில் இல்லை. அவையாவன:

**பண்ணென்னும் பெயர்:** (பண்ணென்பது)
நிறைநரம் பிற்றே பண் என லாகும்.

**திறமென்னும் பெயர்** (திறமென்பது)
குறைநரம் பிற்றே திறமெனப் படுமே.

**நால்வகை யாழின் பெயர்:** (நால்வகை யாழாவன)
பேரியாழ் சகோடயாழ் மருதயாழ் செங்கோட்
டியாழென நான்கு நால்வகை யாழ்ப்பெயர். (102)

1874. நாற்பெரும் பண்ணின் பெயர்

யாமை யாழ்ப்பெயர், குறிஞ்சி யாழும்,
செவ்வழி யாழ்ப்பெயர், முல்லை யாழும்,
பாலை யாழும், மருத யாழும் என
நால்வகை யாழும் நாற்பெரும் பண்ணே.

**நாற்பெரும் பண்ணின் பெயர்:** (4)

1. யாமை அல்லது குறிஞ்சி யாழ், 2. செவ்வழி அல்லது முல்லை யாழ், 3. பாலையாழ், 4. மருதயாழ்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : நால்வகை யாழின் பெயர்

1:4 யாகும்
1:4 யாகும்

இந்நூற்பா பின்வருமாறு மூவேறு தலைப்பில் மூன்று நூற்பாக்களாகவும் சில பிரதிகளில் காணப்படுகிறது.

**குறிஞ்சி யாழின் பெயர்**

யாமை யாழ்ப்பெயர் குறிஞ்சி யாகும்.

**முல்லையாழின் பெயர்**

செவ்வழி யாழ்ப்பெயர் முல்லையா ழாகும்.

**நால்வகை யாழின் பண்ணின் பெயர்**

பாலை யாழு மருத யாழுமென
நால் வகை யாழும் நாற்பெரும் பண்ணே. (103)

## 1875. நெய்தல் யாழின் பெயர்

திறனில் யாழ்ப்பெயர் நெய்தல் யாழ் ஆம்.

**நெய்தல் யாழின் பெயர் (1)** திறனில் யாழ்

இந் நூற்பா சில பிரதிகளில் இல்லை. (104)

## 1876. குறிஞ்சி யாழ்த்திறத்தின் பெயர்

நைவளம், காந்தாரம், (மெய்படு) மலையம்,
பஞ்சுரம், மருள். அயிர்ப்பு, அரற்று, செந்திறம்
என்று இவை எட்டும் குறிஞ்சியாழ்த் திறனே.

**குறிஞ்சியாழ்த்திறத்தின் பெயர்: (8)**

1. நைவளம், 2. காந்தாரம், 3. மலையம், 4. பஞ்சுரம், 5. மருள், 6. அயிர்ப்பு, 7. அரற்று, 8. செந்திறம். (105)

## 1877. செவ்வழியாழ்த் திறத்தின் பெயர்

நேர்திறம், பெயர் திறம், யாமை யாழ், சாதாரி
என்று இவை நான்கும் செவ்வழியாழ்த் திறனே.

**செவ்வழியாழ்த் திறத்தின் பெயர்: (4)**

1. நேர்திறம், 2. பெயர்திறம், 3. யாமையாழ், 4. சாதாரி.

**பாடவேறுபாடு - விளக்கம்**

தலைப்பு: முல்லை யாழ்த்திறனின் பெயர்
1:1-2 நோதிறம் பேர்திறம்
2:3-4 செவ்வழி யாழ்த்திறம், முல்லையாழ்த் திறனே. (106)



## 1878. பாலை யாழ்த்திறத்தின் பெயர்

அராகம், நேர்திறம், உறுப்பு, குறுங்கலி,
ஆசான் ஐந்தும் பாலை யாழ்த் திறனே.
படுமலைப் பாலை, செவ்வழிப் பாலை,
செம்பாலை, விளரிப் பாலை. கொடிப்பாலை
மேற்செம் பாலை, அரும்பாலை என்று இவை
ஏழும் பாலை யாழ்த்திறன் என்ப.

**பாலையாழ்த்திறத்தின் பெயர் (12)**

1. அராகம், 2. நேர்திறம், (நோதிறம்) 3. உறுப்பு, 4. குறுங்கலி, 5. ஆசான், 6. படுமலைப் பாலை, 7. செவ்வழிப்பாலை, 8. செம்பாலை, 9. விளரிப்பாலை, 10. கொடிப்பாலை, 11. மேற்செம்பாலை, 12. அரும் பாலை.

**பாடவேறுபாடு-விளக்கம்**

தலைப்பு; பாலையாழ்த் திறனின் பெயர்.
1: 2 நோதிறம்
3-4 செம்பாலை விளரிப் பாலை யரும்பாலை
கொடிச்செம் பாலை மேற்செம் பாலை
ஏழும் பாலை யாழின் றிறனே.
செம்பாலை விளரிப்பாலை, செங்கொடிப் பாலை. (107)

## 1879. மருதயாழ்த்திறத்தின் பெயர்

நவிர், படு, குறிஞ்சி, பியந்தை யிந் நான்கும்
மருத யாழின் திறன்ஆ கும்மே.

**மருதயாழ்த்திறத்தின் பெயர் (4)**

1. நவிர், 2. படு, 3. குறிஞ்சி, 4. பியந்தை.

**பாடவேறுபாடு - விளக்கம்**

2. மருத யாழ்த்திற னாகு மென்ப, (108)

## 1880. நெய்தல்யாழ்த் திறத்தின் பெயர்

திறனில்யாழ், விளரி, நெய்தல் நிலம் சிவணும்.

**நெய்தல் யாழ்த் திறத்தின் பெயர் (2)**

1. திறனில் யாழ், 2. விளரி.

**பாடவேறுபாடு - விளக்கம்**

தலைப்பு: நெய்தல் யாழின் பெயர்.
திறனில் விளரியாழ் நெய்தனிலன் சிவணும்.

குறிஞ்சி யாழ், பாலையாழ், மருதயாழ், செவ்வழி யாழ், நெய்தல் யாழ் (1876, 1878, 1879, 1877, 1880) என்னும் அடைவிலும் சில பிரதிகளில் காணப்படுகிறது. (109)

## 1881. பாடற்பாட்டின் பெயர்

செந்துறைப் பாட்டே **பாடற்கு ஏற்பது.**

**பாடற்பாட்டின் பெயர்** (1)

செந்துறைப் பாட்டு (110)

## 1882. ஆடற்பாட்டின் பெயர்

வெண்டுறைப் பாட்டே **ஆடற்கு ஏற்பது.**

**ஆடற்பாட்டின் பெயர்** (1)

வெண்டுறைப்பாட்டு.

**பாடவேறுபாடு - விளக்கம்.**

பாடலாடற்றுறைப் பாட்டின் பெயர் அல்லது பாடற் கேற்கும் பாட்டின் பெயர் ஆடற்கேற்கும் பாட்டின் பெயர் எனத் தலைப்பிட்டு 1881, 1882 ஆம் நூற்பாக்கள் ஒன்றாயிணையவும் சற்று மாறுபாட்டுடன் சில பிரதிகளிலும் அச்சுப்பிரதியிலும் பின்வருமாறு காணப்படுகிறது:

செந்துறை வெண்டுறை பாடற் கேற்பன
அம்மென் பாட்டே யாடற் கேற்பன. (111)

## 1883. அகமார்க்கம் என்னும் பெயர்

அருமையிற் பாடல் **அகமார்க்கம் ஆகும்.**

**அகமார்க்கம் என்னும் பெயர்:** (1)

அருமையிற் பாடுவது.

**பாடவேறுபாடு - விளக்கம்**

தலைப்பு: அகமார்க்கமென்பது, அருமையிற் **பாடலின்** பெயர், அருமைப் பாட்டின் பெயர்.
2, பாட்டே 3 அகமாற்கம். (112)

## 1884. ஏழிசையின் பெயர்

**குரலே, துத்தம், கைக்கிளை, உழையே**
**இளியே, விளரி, தாரம் என்ப**
**எழுவகை இசைக்கும் எய்தும் பெயரே**

**ஏழிசையின் பெயர் (1)**

**1. குரல், 2. துத்தம், 3. கைக்கிளை, 4. உழை, 5, இளி, 6. விளரி, 7. தாரம்.** (113)



## 1885. ஏழிசையின் ஓசைப்பெயர்

**சங்கு, குயில், மயில், யானை, புரவி,**
**(செங்கால்) அன்னம், காடை, அவற்று ஓசை.**

**ஏழிசையின் ஓசைப் பெயர்.** (7)

1. சங்கு, 2. குயில், 3. மயில், 4. யானை, 5, புரவி, 6. அன்னம், 7. காடை.

**பாடவேறுபாடு-விளக்கம்**

தலைப்பு; அவற்றினோசையின் பெயர்

2 அங்க வன்னங் காடை யவற்றோசை- **அச்சுப்பிரதி.**
2 அங்கவ் வன்னங் காடை யவற்றிசை
இதனோடு முதற்பதிப்பாசிரியர் இணைத்த **புது** நூற்பா

**மற்று மேழிசையோசையின் பெயர்**

277. ★ வண்டு கிள்ளை வாசிமத யானை
தவளை தேனுவா டேழிசை யோசை, [114]

இதனை மேலை நூற்பாவோடு ஒன்றாகப் **பிற்பதிப்புக்கள்** அமைத்துள்ளன.

## 1886. ஏழிசையினெழுத்தின் பெயர்

**சவ்வும், ரிவ்வும், கவ்வும், மவ்வும்,**
**பவ்வும், தவ்வும், நிவ்வும் என்று இவை**
**ஏழும் அவற்றின் எழுத்தே ஆகும்.**

**ஏழிசையினெழுத்தின் பெயர்** (1) ச, ரி, க, ம, ப, த, நி

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு: அவற்றினெழுத்தின் பெயர்

இதன் பின்னரும் முதற்பதிப்பாசிரியர் சேர்த்த நூற்பா:

**மற்றுமேழிசையின் பெயர்**

278. ❊ வண்டு கிள்ளை வாசிமால் யானை
தவளை தேனுவோ டாடிசை யோசை...

இது முந்திய நூற்பாவினை (1885) அடுத்து முதற் பதிப்பாசிரியர் தந்த நூற்பாவே யாகும். கூறியது கூறலாய் மீண்டும் அவர் அமைத்ததன் பயன் விளங்கவில்லை. இதனை அடுத்து மறு ஆண்டில் (1940) வெளிவந்த பதிப்பிலும் இவ்வாறே உள்ளது. பிற்பட்ட பதிப்புக்களில் இது நீக்கப்பட்டிருக்கிறது.

ஏழிசையின் எழுத்தினை அறிவிக்கும் இந்நூற்பாவினை அடுத்து ஐந்து நூற்பாக்கள் முதற் பதிப்பிலேயே காணப்படுகின்றன. ஆனால், இவை ஏட்டுப் பிரதிகளில் காணப்படவில்லை.

அந்த ஐந்து நூற்பாக்களும் வருமாறு:

**இவற்றினெழுத்தின் பெயர்:**

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஔ எனும்
இவ்வேறெழுத்து மேழிசைக் குரிய

இதனை மேலை நூற்பாவினோடு (1886) ஒன்றாக வைத்துப் பிற பதிப்புகள் அடைவு படுத்தியுள்ளன.

**இவற்றின் பிறப்பிடத்தின் பெயர்**

மிடறுந் தாலு மண்ணமுஞ் சிரமு
நெற்றியு நெஞ்சு நாசியு முறையே
குரலாதி யேழிசைக் குப்பிறப் பிடமே.

**இவற்றின் மாத்திரையின் பெயர்**

இளிது தங்குரற் கேற்குநந் நான்கே
கிளையும் விளரியு மும்மூன் றுழையுந்
தாரமு மிவ்விரண் டேழிசை மாத்திரை

**இவற்றின்மனத்தின் பெயர்**

மௌவன் முல்லை கடம்பு வஞ்சி
நெய்தல் வீரை புன்னையு மிசைமணம்.

**இவற்றிற்கு ஈசரின் பெயர்**

விசுவா மித்திர னியம னங்கி
சதியே வெய்யோன் கௌதமன் காசிபன்
இவ்வேழ் பெயரு மேழிசைக் கீசர், (115)

✯

## 1887. இராகத்தின் பெயர்

தக்க ராகம், துக்க ராகம்,
பழந்தக்க ராகம், நட்ட ராகம்
கின்ன ராகம், சங்கின்ன ராகம்,
நிருபதுங்க ராகம் என்ன வருபவை
இராகப் பெயர்என இசைத்தனர் புலவர்.

**இராகப் பெயர் (7)**

1. தக்கராகம், 2. துக்கராகம், 3. பழந்தக்கராகம், 4. நட்ட ராகம், 5. கின்ன ராகம், 6. சங்கின்னராகம், 7. நிருபதுங்கராகம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு: இராகங்களின் பெயர்
5. இராக வண்பெய ராகு மென்ப. (116)



## 1888. கொல்லியின் பெயர்

சாயவேளா கொல்லி, ஆரியவேளா கொல்லி,
சித்திரவேளா கொல்லி, விசித்திரவேளா கொல்லி,
இத்திறம் கொல்லிப் பெயர் என இசைப்பர்.

**கொல்லியின் பெயர். (4)**

1. சாயவேளா கொல்லி, 2. ஆரியவேளா கொல்லி, 3. சித்திரவேளா கொல்லி, 4. விசித்திரவேளா கொல்லி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு: கொல்லி வகையின் பெயர், கொல்லித் திறத்தின் பெயர்.

1 : 1 சாயவேளர் 3. ஆரியவேளர்
2 : 1 சித்திரவேளர் 3. விசித்திர வேளர்.
சாயவேளர் கொல்லி சித்திரவேளர் கொல்லி
இத்திறங் கொல்லிப் பெயரென விசைப்பர்—அச்சுப்பிரதி (117)

## 1889. வராடியின் பெயர்

ஆரிய வராடி, கொல்லி வராடி
தீப வராடி என ஒரு மூன்றும்
ஆகும் வராடிக்கு அடைத்தபல் பெயரே

**வராடியின் பெயர் (3)**

1. ஆரியவராடி, 2. கொல்லி வராடி, 3. தீபவராடி.

**பாடவேறுபாடு விளக்கம்**

தலைப்பு : வராடிவகையின் பெயர், வராடித்திறத்தின் பெயர்.

1 : 3—4 கொல்லிய வராடி
2 : 1—4 தீப வராடி சோக வராடி
2 : 3—4 யென்னுந் திறமும்
3 : 3 அமைத்தபல் (118)

## 1890. குறிஞ்சியின் பெயர்

சாவகன் குறிஞ்சி, மேகராகக் குறிஞ்சி,
வியாளக் குறிஞ்சி, அந்தாளிக் குறிஞ்சி
ஆகும் குறிஞ்சிக்கு அடைத்த பல்பெயரே.

**குறிஞ்சியின் பெயர்: (4)**

1. சாவகன் குறிஞ்சி, 2. மேகராகக் குறிஞ்சி, 3. வியாளக் குறிஞ்சி, 4. அந்தாளிக்குறிஞ்சி.

ஏழிசையின் எழுத்தினை அறிவிக்கும் இந்நூற்பாவினை அடுத்து ஐந்து நூற்பாக்கள் முதற் பதிப்பிலேயே காணப்படுகின்றன. ஆனால், இவை ஏட்டுப் பிரதிகளில் காணப்படவில்லை.

அந்த ஐந்து நூற்பாக்களும் வருமாறு:

**இவற்றினெழுத்தின் பெயர்:**

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஔ எனும்
இவ்வேறெழுத்து மேழிசைக் குரிய

இதனை மேலை நூற்பாவினோடு (1886) ஒன்றாக வைத்துப் பிற பதிப்புகள் அடைவு படுத்தியுள்ளன.

**இவற்றின் பிறப்பிடத்தின் பெயர்**

மிடறுந் தாலு மண்ணமுஞ் சிரமு
நெற்றியு நெஞ்சு நாசியு முறையே
குரலாதி யேழிசைக் குப்பிறப் பிடமே.

**இவற்றின் மாத்திரையின் பெயர்**

இளிது தங்குரற் கேற்குநந் நான்கே
திளையும் விளரியு மும்மூன் றுழையுந்
தாரமு மிவ்விரண் டேழிசை மாத்திரை

**இவற்றின்மனத்தின் பெயர்**

மௌவன் முல்லை கடம்பு வஞ்சி
நெய்தல் வீரை புன்னையு மிசைமணம்.

**இவற்றிற்கு ஈசரின் பெயர்**

விசுவா மித்திர னியம னங்கி
சதியே வெய்யோன் கௌதமன் காசிபன்
இவ்வேழ் பெயரு மேழிசைக் கீசர். (115)

## 1887. இராகத்தின் பெயர்

தக்க ராகம், துக்க ராகம்,
பழந்தக்க ராகம், நட்ட ராகம்
கின்ன ராகம், சங்கின்ன ராகம்,
நிருபதுங்க ராகம் என்ன வருபவை
இராகப் பெயர்என இசைத்தனர் புலவர்.

**இராகப் பெயர் (7)**

1. தக்கராகம், 2. துக்கராகம், 3. பழந்தக்கராகம், 4. நட்டராகம், 5. கின்ன ராகம், 6. சங்கின்னராகம், 7. நிருபதுங்கராகம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு: இராகங்களின் பெயர்
5. இராக வண்பெய ராகு மென்ப. (116)



## 1888. கொல்லியின் பெயர்

சாயவேளா கொல்லி, ஆரியவேளா கொல்லி,
சித்திரவேளா கொல்லி, விசித்திரவேளா கொல்லி,
இத்திறம் கொல்லிப் பெயர் என இசைப்பர்.

**கொல்லியின் பெயர். (4)**

1. சாயவேளா கொல்லி, 2. ஆரியவேளா கொல்லி, 3. சித்திரவேளா கொல்லி, 4. விசித்திரவேளா கொல்லி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு: கொல்லி வகையின் பெயர், கொல்லித் திறத்தின் பெயர்.

1 : 1 சாயவேளர் 3. ஆரியவேளர்
2 : 1 சித்திரவேளர் 3. விசித்திர வேளர்.
சாயவேளர் கொல்லி சித்திரவேளர் கொல்லி
இத்திறங் கொல்லிப் பெயரென விசைப்பர்—
அச்சுப்பிரதி (117)

## 1889. வராடியின் பெயர்

ஆரிய வராடி, கொல்லி வராடி
தீப வராடி என ஒரு மூன்றும்
ஆகும் வராடிக்கு அடைத்தபல் பெயரே

**வராடியின் பெயர் (3)**

1. ஆரியவராடி, 2. கொல்லி வராடி, 3. தீபவராடி.

**பாடவேறுபாடு விளக்கம்**

தலைப்பு: வராடிவகையின் பெயர், வராடித்திறத்தின் பெயர்.

1 : 3—4 கொல்லிய வராடி
2 : 1—4 தீப வராடி சோக வராடி
2 : 3—4 யென்னுந் திறமும்
3 : 3 அமைத்தபல் (118)

## 1890. குறிஞ்சியின் பெயர்

சாவகன் குறிஞ்சி, மேகராகக் குறிஞ்சி,
வியாளக் குறிஞ்சி, அந்தாளிக் குறிஞ்சி
ஆகும் குறிஞ்சிக்கு அடைத்த பல்பெயரே.

**குறிஞ்சியின் பெயர்: (4)**

1. சாவகன் குறிஞ்சி, 2. மேகராகக் குறிஞ்சி, 3. வியாளக் குறிஞ்சி, 4. அந்தாளிக்குறிஞ்சி.

**பாடவேறுபாடு--விளக்கம்**

தலைப்பு: குறிஞ்சி வகையின் பெயர்
2:1-2 யாளக் குறிஞ்சி
3:3 கடுத்தபல் (119)

## 1891. பஞ்சமத்தின் பெயர்

காந்தார பஞ்சமம், உருத்திர பஞ்சமம்.

**பஞ்சமத்தின் பெயர் (2)**

1. காந்தார பஞ்சமம், 2. உருத்திரபஞ்சமம்.

**பாடவேறுபாடு —விளக்கம்**

பஞ்சம மருள்பஞ் சமப்பெய ராகும். (120)

## 1892. தக்கேசியின் பெயர்

பஞ்சமம், காம்போதி, பாண்டி, **தக்கேசி.**

**தக்கேசியின் பெயர் (3)**

1. பஞ்சமம், 2. காம்போதி,3, பாண்டி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

காம்போதி பாண்டி கேசிதக் கேசி. (121)

## 1893. இந்தளத்தின் பெயர்

**இந்தளம்,** மருளிந் தளமே ஆகும்.

**இந்தளத்தின் பெயர் (1)** மருளிந்தளம். (122)

**பாடவேறுபாடு—விளக்கம்**

1891, 1892, 1893 ஆம் நூற்பாக்களில் வரும் பண்ணின் பெயர்களையும், இவற்றின்பின் 1894 ஆம் நூற்பாவில் குறிக்கப் படும் பண்களின் பகுதியாக அடக்கியும் சில பிரதிகள் கொண் டுள்ளன.

## 1894. பண்ணின் பெயர்

இராமக்கிரி, தேசாக்கிரி: கொண்டைக்கிரி, மகுடராமக்கிரி,
அந்தாளி பாடை, நட்ட பாடை,
அருமவதி, செந்துருதி, சீகாமரம், சிகண்டி,
காந்தாரம், புறநீர்மை, குறண்டி, கௌசிகம்,
நாட்டை, சாதாரி, சாயரி, குச்சரி.
நளுத்தை, பழம்பஞ்சுரம், பஞ்சுரம், கவ்வாணம்,
கொல்லி கவ்வாணம், காஞ்சி, கவுடிகம்,
பிலகரி, பயிரவி, காம்போதி என்னப்
பண்ணும் திறமும் பிறவும் **பண்ணே.**



**பண்ணின் பெயர் (28)**

1 இராமக்கிரி,2.தேசாக்கிரி,3.கொண்டைக்கிரி,4. மகுடரா மக்கிரி,5.அந்தாளி பாடை, 6.நட்டபாடை, 7.அருமவதி,8. செந் துருதி, 9. சீகாமரம், 10. சிகண்டி, 11. காந்தாராம், 12. புற நீர்மை, 13. குறண்டி, 14.கௌசிகம், 15. நாட்டை, 16. சாதாரி, 17. சாயரி, 18. குச்சரி, 19. நளுத்தை, 20 பழம்பஞ்சுரம், 21. பஞ்சுரம், 22. கவ்வாணம், 23. கொல்லி கவ்வாணம், 24. காஞ்சி,25. கவுடிகம், 26. பிலகரி, 27. பயிரவி,28.காம்போதி.

**பாடவேறுபாடு--விளக்கம்**

அந்தாளி பாடை நட்டபாடை நைவளம்
அரும வதிசெந் துருதிசீ காமரம்
சிகண்டி மேக ராகக் குறிஞ்சி
காந்தா ரம்புற நீர்மை கவுசிகம்
குறண்டி நாட்டைசா தாரி சாயரி
குச்சரி நளுத்தை பஞ்சு ரம்பழம்
பஞ்சுரங் கவ்வாணங் கொல்லிகவ் வாணம்
காஞ்சி கவுடி மலகரி யென்னும்
இத்திறம் பாட்டிற்கிசைந்த பண்ணே. (123)

## 1895. ஒலித்தலின் பெயர்

கலித்தல், சும்மை. கம்பலை, அழுங்கல்,
சிலைத்தல், துவைத்தல், சிலம்பல், இரங்கல்,
இமிழ்த்தல், விம்மல், இரட்டல், ஏங்கல்
கனைத்தல், தழங்கல், கறங்கல், அரற்றல்,
இசைத்தல் என்று இவை **ஒலித்தலை இசைக்கும்.**

**ஒலித்தலின் பெயர் (17)**

1. கலித்தல், 2, சும்மை, 3. கம்பலை, 4. அழுங்கல், 5. சிலைத்தல், 6. துவைத்தல், 7. சிலம்பல், 8. இரங்கல், 9. இமிழ்த்தல், 10. விம்மல், 11, இரட்டல், 12. ஏங்கல், 13. கனைத்தல், 14. தழங்கல், 15. கறங்கல், 16. அரற்றல், 17. இசைத்தல்,

**பாடவேறுபாடு-விளக்கம்**

2: 3-4 இரங்கல் சிலம்பல்
4: 3-4 இரற்றல் கறங்கல்

இதனோடு முதற்பதிப்பாசிரியர் இணைத்த புது நூற்பா:

**மற்று மொழித்தலின் பெயர்**

279.★ சிரற்ற றொனித்த றெழித்தல் குமுற
லுரத்த லுளைத்த லுரைத்த லேங்க

விரைத்த லுலம்ப விடித்தன் முழக்கல்
குரைத்த றெவிட்டல் குளிற வியம்பல்
சிலம்ப லலம்பல் சிதைத்தல் புலம்ப
விலங்கிந் நாலைந் தொலித்தலுக் கேற்கும். (124)

### 1896. ஒலியின் பெயர்

ஓசை, நாதம், கம்பலை, ஓலே,
ஆகுலம், புலம்பல், கோடனை, அரவம்,
ஓதை, கர்ச்சனை, ஒலி என் கிளவி.

**ஒலியின் பெயர் (10)**

1. ஓசை, 2. நாதம், 3. கம்பலை, 4. ஓல், 5. ஆகுலம் 6. புலம்பல், 7. கோடணை, 8. அரவம், 9. ஓதை, 10. கர்ச்சனை

இதனோடு முதற்பதிப்பாசிரியர் இணைத்த புது நூற்பா:

**மற்றுமொழியின் பெயர்**

280. ☆சுருதி துழனி தொனி யாரவாரங்
கரையுரை சும்மை யிசை களன் வகுணி
பாட்டிடி யாறிரண் டொலியினைப் பகரும்.

இதன் பின் **சிலையொலியின்பெயர்** என்னும் தலைப்பில்
'மரும ராஞ்சம் வழங்குஞ் சிலையொலி'
என ஒரு நூற்பா அச்சுப்பிரதியில் உள்ளது. இஃது
ஏட்டுப்பிரதிகளில் இல்லை. (125)

### 1897. உள்ளோசையின் பெயர்

முரல்வும், நரல்வும், தெளிரும், ஞெளிரும்,
உழையும், நுணுக்கமும், உள்ளோசை ஆகும்.

**உள்ளோசையின் பெயர்**

1. முரல்வு, 2. நரல்வு, 3. தெளிர், 4. தெளிர், 5. உழை, 6. நுணுக்கம்.

**பாடவேறுபாடு-விளக்கம்**

2: உழைவும், விரைவும், விளைவும், விழைவும். (126)

### 1898. எழுத்திலாவோசையின் பெயர்

பிளிறலும், குளிறலும், பிரற்றலும், சிரற்றலும்,
மருளலும். பயிறலும், குரைத்தலும், கனைத்தலும்,
முளைத்தலும், அகவலும் எழுத்திலா ஓசை.

**எழுத்திலாவோசையின் பெயர் [10]**

1. பிளிறல், 2. குளிறல், 3. பிரற்றல், 4. சிரற்றல், 5. மருளல், 6. பயிறல், 7. குரைத்தல், 8. கனைத்தல், 9. முளைத்தல், 10. அகவல்.



**பாடவேறுபாடு-விளக்கம்**

தலைப்பு: எழுத்தில்லா ஓசையின் பெயர்.
1: 1-4 பிளிறுங் குளிறும் பிணைத்தலுஞ் சிலிர்த்தலும்
2: 2 பயிற்றலும், 4. கரைதலும்

சிரற்றலுங் கரைதலு முழைத்தலுங் கரைத்தலும்
வண்டுறை பிளிறுங் குளிறும் பிரற்றலும்
மருளலும் பிரளலு மெழுத்திலா வோசை யென்ப. (127)

### 1899. ஆரவாரத்தின் பெயர்

அதிர்ச்சி, அழுங்கல், ஞெள்ளல், உரற்றல்,
குரைத்தல், தழங்கல், பிளிறல், துவைத்தல்,
கலித்தல், கரைத்தல், ஓதை, பராரை,
தெழித்தல், புலம்பல், பூசல், தமரம்,
கனைத்தல், சிள்ளெனல், ஒலி,கோ லாகலம்,
அனைத்தும் திமிலமொடு **ஆரவாரம்.**

**ஆரவாரத்தின் பெயர் [21]**

1. அதிர்ச்சி, 2. அழுங்கல், 3. ஞெள்ளல், 4, உரற்றல், 5. குரைத்தல், 6. தழங்கல், 7. பிளிறல், 8. துவைத்தல், 9. கலித்தல், 10. கரைத்தல், 11. ஓதை, 12. பராரை, 13. தெழித்தல், 14. புலம்பல், 15. பூசல், 16. தமரம், 17. கனைத்தல், 18. சிள்ளெனல், 19. ஒலி, 20. கோலாகலம், 21. திமிலம்.

**பாடவேறுபாடு -விளக்கம்**

1: 4 லுரறல், லூதல்,
3: 2 கரைத
4: 1 தெளிதல்
5: 1 கனைத்தல் சிள்ளே யொலியே கலக்கம்
ஆகுலங்கோலா கலமு மதற்கே
6: 2 திமிரமொடு

இதுவே சிற்சில மாறுதல்களுடன் பின்வருமாறு சில பிரதிகளில் உள்ளது.

அதிர்ச்சி யழுங்கல் ஞெள்ள லரற்றல்
சிலைத்தல் சிலம்பல் குரைத்த றழங்கல்
பிளிற றுவைத்தல் கலித்தல் கரைதல்
ஓதை பராரை தெழித்த லலம்பல்
பூசறமர மொலித்த லாகும்
ஒலிகோ லாகலம் அனைத்தும் திமரமொ
டார வார மாகு மென்ப.

இந்நூற்பாவினை அடுத்து ஒன்றலாப் பேரொலியின் பெயர் என அச்சுப்பிரதியில் காணப்படும் நூற்பா ஏடுகளில் இல்லை.

தமரம் பூச லார்ப்புக் கர்ச்சனை
குமுற லுலம்பல் கோடணை கோவா
கலமே தெழித்தல் கலகமா குலமோ
டுறுதல் முந்நான் கொன்றாலப் பேரொலி. (128)

1900. அனுகரணவோசையின் பெயர்

இம்மெனல், கல்லெனல், இமுமெனல், வல்லெனல், பொம்மெனல், ஒல்லெனல், பொள்ளெனல், ஞெள்ளெனல், அன்ன அனுகரண ஓசை ஆகும்,

**அனுகரணவோசையின் பெயர்**(8)

1. இம்மெனல், 2. கல்லெனல், 3. இமுமெனல், **4.** வல்லெனல,5. பொம்மெனல், 6. ஒல்லெனல், 7. பொள்ளெனல், 8. ஞெள்ளெனல்.

**பாடவேறுபாடு--விளக்கம்**

3:1-2 அன்னவை யனுகரண

இதன் பின் அச்சுப்பிரதியில் காணும் இரு நூற்பாக்கள் ஏடுகளில் காணப்படவில்லை.

**மற்று மனுகரணவோசையின் பெயர்**

கொம்மெனல் விடேலெனல் தெரேலெனன் முகேரெனல்
அம்மெனல் சரேலென லனுகரண வோசை.

இதனையும் 1900 ஆம் நூற்பாவோடு ஒன்றா யிணையப் பிற்பதிப்புக்கள் ஒரே நூற்பாவாகக் கொண்டுள்ளன.

**உபயவோசையின் பெயர்**

படபடெனல் களகளெனல் பதபதெனல் கொளகொளெனல்
மொடுமொடெனல் திடுதிடெனல் மொகமொகெனல் கலகலெனல்
நெடநெடனல் கடகடெனல் நிறையுபய வோசை. (129)

1901. சேந்தன் கவித்திறம்

அரக்கரைப் பொருத முரட்போர் வில்லும்
பாரதம் பொருத பேரிசைச் சிலையும்
பாடிய புராண பாடகன் உணர்வொடு
தாருகற் கடிந்த வீரியத் தனிவேல்
பாடிய புலவன் பதி அம்பர்ச் சேந்தன்
பயில்வுற்ற திவாகரத்துப் பத்தாவது
ஒலிபற்றிய பெயர்த்தொகுதி முற்றும்.

**பாடவேறுபாடு-விளக்கம்**

3 அடி சில பிரதிகளில் இல்லை.
4 தாருகற்றடிந்த வீரத் தயிலும்
தாருகற்றடிந்த வீரைபத் திரைவேல்
5: 3-4 பதியம்பற் சேந்தன்
6: 1 பயிலுற்ற (130)

பதினோராவது

# ஒருசொல் பல்பொருட் பெயர்த் தொகுதி